# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 160/மா/2019
ஆணை நாள்: 02–3–2020

திரு. G. மணி,
சென்னை – 600 017. – முறையீட்டு மனுதாரர்

திரு. விஸ்வநாதன்,
உதவி பொறியாளர்,
வார்டு 136, மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

சென்னை – 17, தியாகராய நகர், டாக்டர் தாமஸ் ரோடு, எண். 12 என்ற முகவரியில் வசிக்கும் திரு. G. மணி, என்பவரது 15.10.2019 நாளிட்ட முறையீட்டு மனு 15.10.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு, முறையீட்டு மனு எண். 160/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் தனது 15.10.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில், பெருநகர சென்னை மாநகராட்சி, 10வது மண்டலம், 136வது வார்டில், உதவி பொறியாளராக பணிபுரியும் திரு. விஸ்வநாதன் என்பவரிடம் மேற்படி வார்டில் நடைபாதையினை ஆக்கிரமித்துள்ள கடைகளை அகற்ற கோரி புகார் தெரிவித்தும், நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அங்குள்ள பூங்காவைச் சுற்றி அமைந்துள்ள கடைகளில் பணம் பெற்றுக் கொண்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றி நடைபாதையை மக்கள் பயன்படுத்துவதற்கு ஆவண செய்யுமாறு கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி குற்றம் சாட்டப்பட்ட 10வது மண்டலம், 136வது கோட்ட உதவிபொறியாளர் தனது 17.12.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள தியாகராயாநகர் ஸ்மார்ட் சிட்டி நடைபாதை வளாகத்திலோ, அவற்றை சுற்றியுள்ள பூங்காக்களை சுற்றியோ நடைபாதை ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லாதபடி ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது அகற்றி வருவதாகவும், மேலும் இப்புகாரானது ஆக்கிரமிப்பு நடவடிக்கை மூலம் பாதிப்புக்குள்ளாகிய நபர்கள் கூறும் பொய் புகார் எனவும், திரு. G. மணி என்பவர் இதுபோன்ற புகார் ஏதும் தன்னிடம் அளிக்கவில்லை என்றும், இது ஆக்கிரமிப்பாளர்களின் உண்மையற்ற குற்றச்சாட்டு எனவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 23.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சென்னை மாநகராட்சி 136 வது வார்டில் நடைபாதையை ஆக்கிரமிப்பு செய்து பெட்டி கடை, பங்க் கடைகள் வைத்துள்ளனர் என்றும், அது சம்மந்தமான புகைப்படத்துடன் திரு. விஸ்வநாதன் பொறியாளரிடம் புகார் கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், நடேசன் பூங்காவை சுற்றிலும் அனுமதியற்ற கடைகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த கடைதாரர்களிடமிருந்து பணம் கையூட்டாக பெறப்படுகிறது என்றும், மேலும், ராமகிருஷ்ணா பள்ளிகளுக்கு முன்பும் பள்ளி குழந்தைகள் படிக்கின்ற இடத்திலும் பீடி, சிகெரட் போன்ற பொருள்கள் விற்கப்படுகின்றன என்றும், நடேசன் பூங்கா சுற்றிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டலம், 136வது வார்டு உதவி பொறியாளர் 23.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் மனுதாரர் தன்னை இதுவரை அணுகியது இல்லை என்றும் தான் அவ்வப்போது சில ஆக்கிரமிப்புகளை அகற்றி, வருவதாகவும் அவற்றை நிரந்தரமாக அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், Vending Committee மண்டலம் 10 கூடி யாருக்கு கடைகள் மற்றும் விற்பனை செய்யும் (Vending Zone) இடத்தினை தேர்வு செய்யப்படவுள்ளது என்றும், தான் இன்னொரு ஆய்வு செய்து, விபரங்களை அறிக்கையாக 30.12.2019-ம் தேதிக்குள் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிப்பதாகவும், ஆக்கிரமிப்பாளார்கள் யாரிடமும் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும், அவர்கள் யாரிடமும் பணம் வாங்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 26.12.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் தொடர்பாக உதவி செயற்பொறியாளரின் ஆய்வறிக்கையினை பெற்று குறிப்புரையினுடன் சமர்ப்பிக்க மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி, 10வது மண்டல அலுவலர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் சாலையோர கடைகள் அகற்றப்பட்ட விபரம் மற்றும் நீதிமன்றத்தில் வழக்கில் உள்ள கடைகள் பற்றிய விபரம் ஆகியவற்றினை குறிப்பிட்டு, மேலும் விற்பனை குழு மண்டலம் 10 (Vending committee) கூடி விற்பனை செய்யும் பகுதி (Vending zone) மற்றும் விற்பனை செய்யக்கூடாத பகுதி (Non Vending Zone) என இனம் கண்டு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் Vending Identification Card வழங்கப்பட்ட வியபாரிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மாண்பமை உச்சநீதிமன்றம் வழிகாட்டுதல்படி வெகுவிரைவில் வியபாரிகளுக்கு இடம் ஒதுக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் பெருநகர சென்னை மாநகரட்சியின் 10வது மண்டல, மண்டல அலுவலர் அறிக்கை 136வது கோட்ட உதவி பொறியாளரின் அறிக்கை, மற்றும் வாக்குமூலம், ஆகியவைகளை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மேற்படி மண்டல அலுவலரின் அறிக்கையின்படி Vending Committee கூடி விற்பனை செய்ய கூடிய பகுதி (Vending Zone) மற்றும் விற்பனை செய்ய கூடாத பகுதி (Non Vending Zone) என இனம் கண்டு வியாபாரிகளுக்கு உரிய அடையாள அட்டை (Identification Card) வழங்கிட மாண்பமை உச்சநீதிமன்ற வழிகாட்டுதல் மற்றும் உரிய சட்ட விதிமுறைகளின் நடவடிக்கை மேற்கொள்ளவும் பொதுமக்கள் நடைபாதையில் நடந்து செல்ல எந்த இடையூறும் இல்லாதவாறு உரிய விதிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2--ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

(1) திரு. G. மணி,
த/பெ. கோவிந்தராஜ்,
எண். 12, டாக்டர் தாமஸ் ரோடு,
தி.நகர், சென்னை – 600 017.